**ஆகஸ்ட் – 09**

# TNPSC துளிகள்

- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 77வது நினைவு தினம் ஆகஸ்ட் 08 அன்று அனுசரிக்கப்பட்டது.
    - 1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 08 அன்று, ஆங்கிலேய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மகாத்மா காந்தி ஒரு முழக்கத்துடன் கூடிய குரலைக் கொடுத்தார். இவர் அனைத்து இந்திய காங்கிரஸ் குழுவின் பம்பாய் அமர்வின் போது வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கினார்.
- ஆண் “துனையாளர்களின்” துணையில்லாமல் சர்வதேச அளவில் பயணம் மேற்கொள்ளவும் கடவுச் சீட்டுகளைப் பெறவும் பெண்களை அனுமதிக்கக்கூடிய தனது சட்டத்தை மாற்றியுள்ளதாக சவுதி அரேபியா அறிவித்துள்ளது. இந்த முறை “துணையாளர் முறை” என்றும் அழைக்கப் படுகின்றது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் மருத்துவக் காப்பீடு

- மத்திய சுகாதார அமைச்சகத்தின்படி, தேசிய மருத்துவக் காப்பீட்டின் கீழ் அதிக எண்ணிக்கையிலான குடும்பங்களை தமிழ்நாடு கொண்டுள்ளது.
- தற்பொழுது தமிழ்நாட்டில் குறைந்தபட்சம் 1.57 கோடி குடும்பங்கள் ரூ.5 இலட்சம் மருத்துவக் காப்பீட்டில் (ஒரு குடும்பத்திற்கு) உள்ளடங்கியுள்ளன.
- தமிழ்நாடு அரசு மத்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் - பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவுடன் தமிழ்நாடு முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இணைத்துள்ளது.
- தமிழ்நாட்டில் காப்பீட்டின் கீழ் அதிகமாக மேற்கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சை முறை சிறுநீரகத் தூய்மிப்பாகும் (கூழ்மப் பிரிப்பு).

## தமிழ்நாடு பள்ளிகளில் கட்டாய ஆதார்

- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள், தங்களின் ஆதார் அட்டை குறித்த விவரங்களைக் கட்டாயம் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அறிவித்துள்ளது.
- மாணவர்களின் பெற்றோர்கள் உள்ளிட்ட விவகாரங்கள் பள்ளிகளால் கட்டாயம் சேகரிக்கப்பட்டு மாநில அரசால் நிர்வகிக்கப்படும் கல்வி மேலாண்மைத் தகவல் அமைப்பில் (Educational Management Information System - EMIS) பதிவேற்றப்பட வேண்டும்.
- EMISற்கான ஆதார் பதிவு மற்றும் இந்த விவரங்கள் சேகரிப்பு ஆகியவை மத்திய அரசினால் பகுதியளவு நிதியளிக்கக்கூடிய சமக்ரா சிக்சா நிறுவனத்தினால் மேற்கொள்ளப் படுகின்றது.

# தேசியச் செய்திகள்

## சரத்து 370

- 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 அன்று சரத்து 370 தொடர்பான 2 சட்டப்பூர்வத் தீர்மானங்களை மத்திய உள்துறை அமைச்சர் மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தினார். 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 அன்று இந்த 2 தீர்மானங்களும் மக்களவையால் நிறைவேற்றப்பட்டன. அந்தத் தீர்மானங்கள் பின்வருமாறு:
    - ஜம்மு காஷ்மீருக்குப் பொருந்தக்கூடிய அரசியலமைப்பு ஆணை, 2019 {ஆதாரம் சரத்து 370(1) இந்திய அரசியலமைப்பு} - சரத்து 370 தொடர்பான 1954 ஆம் ஆண்டின் உத்தரவை மேலோங்குவதற்காக இந்தியக் குடியரசுத் தலைவரால் வெளியிடப்பட்டது.
    - இந்திய அரசியலமைப்பின் சரத்து 370ஐ நீக்குவதற்கான தீர்மானம் {ஆதாரம் சரத்து 370 (3)}

### *1954 ஆம் ஆண்டின் ஆணை*

- 1954 ஆம் ஆண்டின் குடியரசுத் தலைவர் ஆணையானது ஜம்மு காஷ்மீர் உருவாக்கத்திற்கான ஒரு அடிப்படை சட்ட ஆவணத்தை உருவாக்கியது.
- ஜம்மு காஷ்மீருக்கு பொருந்தக் கூடிய அரசியலமைப்பு ஆணை, 1954 ஆனது ஜம்மு காஷ்மீருக்கு பொருந்தக்கூடிய சரத்துகள் மற்றும் விதிமுறைகளைப் பட்டியலிடுகின்றது.
- இந்த உத்தரவின்படி, இந்திய அரசியலமைப்பின் சரத்து 370ன் கீழ் ஜம்மு காஷ்மீர் சிறப்பு அந்தஸ்தைப் பெற்றது.
- இந்த சரத்து இதை ஒரு தற்காலிக ஏற்பாடாக விவரித்துள்ளது. குடியரசுத் தலைவர் இது குறித்த ஒரு பொது அறிவிப்பை வெளியிட்டால் இந்த சிறப்பு அந்தஸ்து முடிவுக்கு வந்து விடும்.
- சரத்து 370 ஆனது ஜம்மு காஷ்மீருக்கான ஒரு தனிப்பட்ட அரசியலமைப்பை உருவாக்க வழிவகை செய்துள்ளது. ஜம்மு காஷ்மீர் மாநில அரசின் இசைவு இல்லாமல் பாராளுமன்றத்தால் உருவாக்கப்படும் அனைத்துச் சட்டங்களும் ஜம்மு காஷ்மீருக்குத் தானாகவேப் பொருந்தாது.
- இந்தச் சிறப்பு நடவடிக்கைகளை அம்மாநிலத்தின் அரசியலமைப்புச் சபையின் படி அல்லது அமைச்சரவைக் குழுவின் ஆலோசனையின் படி ஜம்மு காஷ்மீரின் சதர்-இ-ரியாசத்தின் (மன்னர்) பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே மாற்றியமைக்க முடியும்.

### *சரத்து 35 ஏ*

- 1954 ஆம் ஆண்டில், இந்தியக் குடியரசுத் தலைவர் அரசியலமைப்பின் சரத்து 35 ஏ-ன் கீழ் சில விதிவிலக்குகள் அடங்கிய ஒரு தொகுப்பையும் பட்டியலிட்டுள்ளார் (இந்த சரத்து இந்திய அரசியலமைப்பின் ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் ஜம்மு காஷமீர் அரசியலமைப்பில் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது).
- இது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் சேர்க்கப் படாமல் 1954 ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆணையின் மூலமாக இணைக்கப் பட்டது.
- இது பின்வருபவை போன்ற ஜம்மு காஷமீர் மாநிலத்தின் பிரத்தியேக சட்டங்களைப் பாதுகாக்கின்றது.
    - வெளி மாநில மக்கள் இங்கு சொத்துகள் வாங்குவது மீதான தடை
    - காஷ்மீர் பெண்கள் காஷ்மீர் அல்லாதவர்களைத் திருமணம் செய்தால், அவர்களின் சொத்து உரிமைகள் இழப்பு.

### *2019 ஆம் ஆண்டின் ஆணை*

- இந்தியக் குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் இந்திய அரசியலமைப்பின் சரத்து 370(1)ன் கீழ் குடியரசுத் தலைவர் ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளார்.
- இந்த விதி ஜம்மு காஷ்மீருக்கு பொருந்தக்கூடிய விவகாரங்களைக் குறிப்பிட குடியரசுத் தலைவரை அனுமதிக்கின்றது.
- இதை ஜம்மு காஷ்மீர் அரசின் இசைவுடன் மட்டுமே வெளியிட முடியும். இந்த அறிவிக்கையானது, "ஜம்மு காஷ்மீர் மாநில அரசின் இசைவுடன்" என்ற சொற்களைப் பயன்படுத்துகின்றது.
- தற்பொழுது ஜம்மு காஷ்மீர் மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ், அம்மாநில ஆளுநரால் நிர்வகிக்கப்படுவதால், அம்மாநில அரசின் சார்பில் ஆளுநர் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்.
- இந்த ஆணை 1954 ஆம் ஆண்டின் ஆணையை மேலோங்க முயல்கின்றது.
- இந்த ஆணையின்படி, ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கான ஒரு தனிப்பட்ட "அரசியலமைப்பின்" அடிப்படையில் உருவாக்கப்பட்ட அனைத்து அம்சங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன.
- இந்திய அரசியலமைப்பின் அனைத்து அம்சங்களும் ஜம்மு காஷ்மீருக்கும் பொருந்தும் என்று இந்த ஆணை அறிவிக்கின்றது.

### *2019 ஆம் ஆண்டின் ஆணையை ஆதரிக்கக் கூடிய சிறப்பு நடவடிக்கைகள்*

- இந்திய அரசியலமைப்பின் சரத்து 367 உடன் சில விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. சரத்து 367 ஆனது "பொருள் விளக்கங்களைக்" கொண்டுள்ளது.
- அமைச்சரவைக் குழுவின் அறிவுரையின்படி செயல்படும் சதர்-இ-ரியாசத் பற்றிய அனைத்துக் குறிப்புகளும், இனிமேல் அம்மாநிலத்தின் "ஆளுநரைக்" குறிப்பிடுவதாகக் கருப்படும்.
- மாநில அரசைப் பற்றிய அனைத்துக் குறிப்புகளும் இனிமேல் "ஆளுநர்" என்பதைக் குறிக்கும்.
- சரத்து 370(3) ஆனது அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே குடியரசுத் தலைவர் சரத்து 370ஐ ஜம்மு காஷ்மீரில் இனி செயல்படாது என்று அறிவிக்க முடியும் என்று கூறுகின்றது.
- "அரசியலமைப்புச் சபை" பற்றிய குறிப்புகள் தற்போது "மாநிலத்தின் சட்டசபை" என்று குறிப்பிடப் படுவதற்காகத் திருத்தப்பட்டுள்ளது.
- தற்பொழுது மாநில சட்டமன்றம் செயல்படாததால், அம்மாநில ஆளுநர் முக்கியப் பங்கு வகிக்கின்றார்.

# பொருளாதாரச் செய்திகள்

## நிதிக் கொள்கை – அறிக்கை

- நிதிக் கொள்கைக் குழுவின் (MPC - Monetary Policy Committee) அறிவுரையின்படி இந்திய ரிசர்வ் வங்கியானது ரெப்போ விகிதத்தை 35 புள்ளிகள் அளவில் குறைத்து, 5.40 சதவிகிதமாக நிர்ணயித்துள்ளது.
- இது வங்கிக் கடன்களை குறைந்த வட்டியில் பெற உதவும்.
- தொடர்ந்து நான்காவது முறையாக MPC ஆனது ரெப்போ விகிதங்களைக் குறைத்துள்ளது.

- இந்த ரெப்போ விகிதக் குறைப்பு பின்வருவனவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.
  - 4 சதவிகிதம் என்ற அளவிற்கு நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்கத்திற்கான இடைக்கால இலக்கை அடைதல்.
  - வளர்ச்சிக்கு உதவி செய்தல்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## கடல் அலைகளிலிருந்து மின்சாரம்

- கடல் அலைகளிலிருந்து மின்சாரத்தை எடுப்பதற்காக மதராஸில் உள்ள இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம் (IIT-Madras) சென்னையில் உள்ள தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்துள்ளது.
- மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக கடல் அலைகளின் சக்தியைப் பயன்படுத்தக்கூடிய சுழலிகளை (turbines) இந்த 2 நிறுவனங்களும் இணைந்து மேம்படுத்தவிருக்கின்றது.
- இந்தக் கூட்டு முயற்சியானது புதுப்பிக்கத் தக்க ஆற்றலைப் பூர்த்தி செய்வதையும் இந்திய அரசின் பருவநிலை மாற்றம் குறித்த குறிக்கோள்களை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- IIT – மதராஸ் ஆனது 2019 ஆம் ஆண்டில் தனது 60வது ஆண்டு தொடக்க தினத்தை அனுசரித்துக் கொண்டிருக்கின்றது (1959 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது).

# மாநிலச் செய்திகள்

## ஹரியானாவில் முறைப்படுத்தப்பட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா, 2019

- ஹரியானா சட்ட சபையானது ஹரியானாவின் முறைப்படுத்தப்பட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்தும் மசோதா, 2019 என்ற மசோதாவை நிறைவேற்றியுள்ளது.
- இந்த மசோதாவானது குற்றவியல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் முறைப்படுத்தப்பட்ட குற்றக் குழுவினால் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது குற்றங்களைத் தடுப்பதற்கு கம்பிவழி, மின்னணு அல்லது வாய்மொழியாக மேற்கொள்ளப்படும் தகவல் தொடர்புகளை இடைமறிக்கும் அதிகாரங்களை மாநில அரசிற்கு வழங்குகின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸ்திரேலியாவில் மூன்றாம் பாலினத்தைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள்

- ஆஸ்திரேலிய கிரிக்கெட் அமைப்பானது மூன்றாம் பாலினத்தவர்களை உள்ளடக்கிய ஒரு புதிய கொள்கையை அறிவித்துள்ளது.
- இந்தக் கொள்கையானது உயர் நிலைகளில் கிரிக்கெட் போட்டியை விளையாடுவதற்கு மூன்றாம் பாலினத்தவர்களை அனுமதிக்கும்.
- சர்வதேச கிரிக்கெட் ஆணையத்தின் பாலின அங்கீகரிப்புக் கொள்கை மற்றும் பாலின பன்முக வழிகாட்டுதல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த முடிவு

எடுக்கப்பட்டுள்ளது.

- மாநில மற்றும் தேசியப் பெண்கள் அணிகளுக்கு விளையாட விரும்பும் மூன்றாம் பாலினத்தவர்கள் மற்றும் பாலினப் பன்முகமை கொண்ட வீரர்களுக்காக ஒரு ஆண்மையியக்கு நீர் வரம்பை ஆஸ்திரேலியா வரையறுத்துள்ளது.

# முக்கிய தினங்கள்

## உலக பூர்வகுடி மக்களின் சர்வதேச தினம் – ஆகஸ்ட் 09

- ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 09 அன்று உலக பூர்வகுடி மக்களின் சர்வதேச தினம் அனுசரிக்கப் படுகின்றது.
- இந்தத் தினமானது பூர்வகுடி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற உலகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்குப் பூர்வகுடி மக்கள் ஆற்றிய பங்களிப்புகளை அங்கீகரிப்பதையும் நோக்கங்களாகக் கொண்டுள்ளது.
- இது 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் முதன்முறையாக அறிவிக்கப்பட்டது.
- உலக மக்கள் தொகையில் 5 சதவிகிதத்திற்கும் குறைவாக பூர்வகுடி மக்கள் உள்ளனர். ஆனால் ஏழை மக்களில் 15 சதவிகிதம் நபர்கள் பூர்வகுடி மக்களாக உள்ளனர்.
- உலகில் உள்ள மதிப்பிடப்பட்ட 7000 மொழிகளில் பெரும்பான்மையான மொழிகளை இவர்கள் பேசுகின்றார்கள். இவர்கள் வெவ்வேறான 5000 கலாச்சாரங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர்.
- 2019 ஆம் ஆண்டை சர்வதேச பூர்வகுடி மொழிகள் ஆண்டாக குறிக்கப்படுவதன் காரணமாக இந்த ஆண்டின் அனுசரிப்பானது (2019) பூர்வகுடி மக்களின் மொழிகளுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★